விதி 22-ஐத் தளர்த்தல்

MR. DEPUTY SPEAKER: I want to know from the hon. Member, Thiru N. K. Palanisami, whether he withdraws his opposition to the motion, in view of his leader's statement.

THIRU N. K. PALANISAMI: Sir I withdraw my opposition.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனவே இந்தத் தீர்மானத்தைப் பேரவை ஒருமனதாக ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வினாப் பட்டியலில் கண்டுள்ள வினாக்கள் 10—11—1975 திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

(2) அறிக்கை அளித்தல்

அரசினர் உறுதிமொழிக் குழுவின் (ஒன்பதாவது) அறிக்கை

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(3) தனியார் அலுவல்கள்

சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/74) (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, தனியார் அலுவல்கள். தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்ட

1975 டிசம்பர் 8] [பேரவைத் துணைத் தலைவர்]

முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/74) மீதான விவாதம் தொடரும். திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் பேசலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, . . .

(4) தகவல் கோரல்

இந்திய தலைமை அமைச்சரின் தேர்தல் வழக்கில் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு குறித்து

THIRU K. T. K. TANGAMANI : Sir, on a point of information. Even yesterday, I wanted to know about the result of the Supreme Court judgment on Prime Minister's case. In view of the fact that the Supreme Court judgment has been pronounced, has the Chair got anything to say on this?

MR. DEPUTY SPEAKER : I think the judgment has been given wide publicity. That is all I can say now.

THIRU R. PONNAPPA NADAR : Is the hon. Member. Thiru K. T. K. Tangamani giving us a party for the judgment?

MR. DEPUTY SPEAKER : Mr. K. T. K. Tangamani, the hon. Member, Thiru R. Ponnappa Nadar is asking some information from you. He is asking : 'Will you give us some treat or party for the judgment?'

THIRU K. T. K. TANGAMANI : It is for the Congress Party to do this. I invite Thiru Subramaniam to say if he has anything to tell on this.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இன்றே 'ட்ரீட்' கொடுத்திருக்கலாம். ஆனால், இன்று மூன்று வேளையும் ட்ரீட் கிடைப்பதால் அஜீரணம் வந்துவிடும். அதற்குப் பயந்து கொண்டுதான் ட்ரீட் கொடுப்பதைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, என் போன்றவர்களுக்கு மூன்று நான்கு தடவை சாப்பிட்டாலும் அஜீரணம் வராது.